சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 126/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | பாஸ்கர் |
| தந்தை பெயர் | : | மகாலிங்கம் |
| கிராமம் | : | பைங்காநாடு |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 43 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர்

ஆவேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் வாண்டையா வகுப்பை சேர்ந்தவர் ஆவார். அ.சா-1 கஜேந்திரன் என்பவரை தெரியும். கடந்த 01.06.2025 ஆம் தேதி இரவு 8.00 மணிக்கு பைங்காநாடு கிராமம், மெயின் ரோட்டில் உள்ள மது கடையில் நான் மது வாங்குவதற்காக சென்று மது வாங்கிக்கொண்டு வந்துகொண்டிருந்தேன். ஆஜர் எதிரியுடன் 4,5 நபர்கள் வந்தார்கள். ஆஜர் எதிரி அ.சா-1 கஜேந்திரனின் சாதியின் பெயரை சொல்லி அசிங்கமாக பேசி காலில் எட்டி உதைத்தார். அ.சா-1 கீழே விழுந்துவிட்டார். அதில் அ.சா-1 இடுப்பில் அடி பட்டுவிட்டது. அதன் பின்னர் அ.சா-1ன் அண்ணன் மகன் மணிகண்டன் என்பவருக்கு போன் செய்து விவரம் சொன்னார்கள். அதன் பின்னர் அ.சா-1-யை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நடந்த விவரம் சொன்னேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

மேற்படி அ.சா-1 கஜேந்திரன் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அக்கா மகன் ஆவார். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின் போது நானும் மது வாங்க தான் மது கடைக்கு சென்றேன் என்று சொன்னால் சரிதான். மது கடையில் தான் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் நடந்தது என்று சொன்னால் சரிதான். நான் சென்று பார்கையில் அ.சா-1 அடிபட்டு கீழே கிடந்தார். அவரை அழைத்து சென்று சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தேன். நான் செல்வதற்கு முன்பே பிரபு அங்கிருந்து சென்றுவிட்டாரா என்றால் இல்லை. நான் சென்ற பின்னர் தான் அவர் சென்றார். தற்சமயம் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க நானும் அ.சா-1 கஜேந்திரன் என்பவரும் ஒன்றாகதான் வந்துள்ளோம் என்று சொன்னால் சரிதான்.என்னை எந்த போலீசார் விவாரணை செய்தார்கள் என்றால், திருமக்கோட்டை போலீசாரும், மன்னார்குடி காவல் துணை கண்காணிப்பாளரும் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி போலீசார் விவாரணையில் அ.சா-1-னை எதிரியுடன் நான்கு நபர்கள் இணைந்து

தாக்கியதாக நான் எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவத்தின் போது அ.சா-1 கஜேந்திரன் மது போதையில் இருந்ததாலும், அதனால் தான் அவராகவே எதிரியுடன் பிரச்சனை செய்து எதிரி புகார் கொடுத்துவிடுவார் என்பதற்காக பயந்து எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அ.சா-1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.12.02 17:45:16 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.